


தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின், முத்தான திட்டமான "உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதி, குன்னூர் நகராட்சி, மவுண்ட்ரோடு பகுதியில் மல்டி லெவல் கார் பார்க்கிங் அமைப்பதற்கான இடத்தினை தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். உடன் குன்னூர் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி, பொதுக்குழு உறுப்பினர், குன்னூர் நகர மன்ற தலைவர் ஷீலா கேத்தரின், தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை செயலாளர், நகர மன்ற துணை தலைவர் பா.மு வாசிம் ராஜா, மாவட்ட பிரதிநிதி மணிகண்டன் எம்.சி. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வினோத்குமார், பத்மநாபன்,மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் முருகக்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் தலைவர் ஜாஹிர் உசேன் எம்.சி., நகரமன்ற உறுப்பினர்கள் சையது மன்சூர், குமரேசன், ராபர்ட், நகர அவைத்தலைவர் தாஸ், நகர துணை செயலாளர் முருகேசன், கிளை செயலாளர் அப்துல் காதர், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பிரவீன், சந்தீப், மது, மகாலிங்கம், ஸ்ரீதர், சதீஷ், சாஜு, ஆகியோர் கலந்துக்கொண்டனர்.



திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி முன்னாள் அதிபரும் முதல்வருமான முனைவர் ஜான் பிரிட்டோ இயற்கை எய்தினார். இந்தச் செய்தியை அறிந்ததும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி புனித செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு சென்று அங்கு அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். இயேசு சபையின் அருட் சகோதரர்களுக்கும், கல்லூரியின் பேராசிரியர், மாணவர்கள் ஆகியோருக்கு தனது ஆறுதலை தெரிவித்துக் கொண்டார். உடன் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் மோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டிக்காக முதற்கட்டமாக ரூ.15 கோடி!

# மாற்றுத் திறனாளி வீரர்களுக்கு தலா ரூ.7.20 இலட்சத்தில் செயற்கை கால் உபகரணங்கள்!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக்.15-

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 12.10.2023 அன்று முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னையில் நடைபெற உள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டிக்காக முதற்கட்டமாக ரூ.15 கோடி உரிமைத் தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை வழங்கி, மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.7.20 இலட்சம் மதிப்பில் செயற்கை கால்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் டிசம்பர் 9 மற்றும் 10 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டியினை நடத்திட முதற்கட்ட மாக ரூபாய் 15 கோடி உரிமைத்தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை 12.10.2023 அன்று சென்னை, முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விளையாட்டு அமைப்பாளர்களிடம் வழங்கினார்.

இந்திய மோட்டர் ஸ்போர்ட்ஸ் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக, பெருநகர சென்னை மாநகராட்சி (GCC), சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT), ரேஸிங் புரோமோஷன்ஸ் பிரவைட் லிமிடெட் ஆகியவற்றின் சார்பில் இந்தியாவின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் தலைநகரான சென்னையில் "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்" நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டிக்கான அறிமுகக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2023 அன்று நடத்தப்பட்டது. இந்தியாவில் முதல் முறையாக சாலைகள் வழியாக நடத்தப்படுகின்ற மிகப்பெரிய மோட்டார் ரேஸ் இதுவாகும்.

சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் F4 போட்டியானது, இந்தியன் சாம்பியன் ஷிப் மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் ஆகியவை சென்னை மாநகரில் தீவுத்திடல் மைதானத்திலிருந்து 3.5 கி.மீ சுற்றளவில் இரவுப் போட்டியாக (Street Circuit) நடத்தப்படுகிறது. இந்தச் சிறப்புமிக்க போட்டியில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு சார்பில் இந்தப் போட்டியினை தமிழ்நாட்டில் நடத்துவதற்காக ரூபாய் 40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூ.15 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களான கே.ராஜேஷ் மற்றும் கே.கலைச்செல்வன் ஆகிய இருவருக்கும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் தலா ரூ.7.20 இலட்சம் மதிப்பில் செயற்கை கால்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக, துருக்கி நாட்டின் இஸ்தான்புல்லில் 18.05.2023 முதல் 21.05.2023 வரை நடைபெற்ற 2023ஆம் ஆண்டிற்கான WAKO உலகக் கோப்பை கிக்பாக்ஸிங் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த எஸ். பரத் விஷ்ணு (பழைய கேடட்ஸ் 32 கிலோ பிரிவு) மற்றும் ஐந்தாம் இடம் பெற்ற எம்.கோகுலகிருஷ்ணன் மற்றும் எஸ். அஷ்வின் (இளைய கேடட்ஸ் 47 கிலோ பிரிவு) ஆகியோர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, கிக்பாக்சிங் சங்க நிர்வாகிகள் மற்றும் பார்முலா ரேசிங் சர்க்யூட் விளையாட்டு அமைப்பாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### நெல்லை மாவட்டத்தில் - முன்னோடிகளுக்குப் பொற்கிழி - அரசு நிகழ்ச்சிகள் - இளைஞரணி செயல்வீரர் கூட்டங்கள்!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு! இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலை!

நெல்லை, அக்.15-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 26.10.2023 வியாழன் அன்று நெல்லை மாவட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிடவும், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கவும் உள்ளதை முன்னிட்டு அதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் அரசு ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்குதல் போன்ற நிகழ்வுகளில் கலந்து வருகிறார்.

தூத்துக்குடி, தென்காசி மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தை முடித்த நிலையில் வருகிற 26.10.2023 வியாழன் அன்று நெல்லை மாவட்டத்திற்கு வருகை தருகிறார்கள்.

அதன்படி ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல்,கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம்,அரசு நிகழ்வு போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லைக்கு வருவதை முன்னிட்டு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் சிறப்பாக செய்து வருகின்றனர்.

பாளையங்கோட்டை கே.டி.சி.நகரில் உள்ள மாதா மாளிகையில் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியும், அதனை தொடர்ந்து கே.டி.சி நகர் மேம்பாலம் பகுதியில் உள்ள திறந்தவெளி மைதானத்தில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மேடை அரங்கு அமைக்கப்பட்டு வரும் இடங்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என். மாலைராஜா,மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட அவைத் தலைவர் மா.கிரகாம்பெல், மாநகரச் செயலாளர் சு.சுப்பிர மணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணன், பரமசிவ ஐயப்பன், மேயர் பி.எம். சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன், அப்துல் கையூம், மாவட்டப் பொருளாளர் அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் முருகன், செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அணி செல்வசூடாமணி, தொண்டர் அணி தொப்பி மைதீன், ஆதிதிராவிடர் நலக்குழு நவநீதன், பொறியாளர் அணி சுரேந்தர், நெசவாளர் அணி ஸ்டீபன், விவசாய அணி முருகன், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மீரான்மைதீன், அலிஃப்மீரான்,

நெசவாளர் அணி சங்கரலிங்கம், பகுதி செயலாளர்கள் பாளை அன்டன் செல்லதுரை, நெல்லை நமச்சிவாயம், ரத்தினபாலா, மணிகண்டன், அருண்குமார், சுப்ரீத் சுப்பிரமணியன், சங்கரன்கோவில் சங்கரநாராயணசாமி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் வழக்கறிஞர் து.சண்முகையா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை!

சென்னை, அக். 15-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இம்மாதம் 23ம் தேதி முதல் 25ம் தேதிகளுக்கு இடையே தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை கர்நாடகா மற்றும் தெலங்கானா பகுதிகளில் படிப்படியாக குறைந்து வருகிறது.

இதையடுத்து தமிழ்நாட்டிற்கு நீரை வாரி வழங்கும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமான சூழல் உருவாகி வருகிறது.

இந்த நிலையில் அக்டோபர் 19ம் தேதி வரை மாநிலத்தின் சில பகுதிகளில் பரவலாக மழை பெய்யும் என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

### மூலனூர் ஒன்றியம் எம்.கருப்பன்வலசில்

# 154 விவசாயிகளுக்கு ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகள்!

## அமைச்சர்கள் மு. பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், அக். 15 -

திருப்பூர் தெற்கு மாவட்டம், மூலனூர் ஒன்றியம் எம்.கருப்பன்வலசில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கிளையை திறந்து வைத்து 154 விவசாயிகளுக்கு ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில், திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஊராட்சி ஒன்றியம், எம்.கருப்பன்வலசில் ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூ.23.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகத்தை திறந்து வைத்தும், எம்.கருப்பன்வலசில் எரிசினம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கிளை திறந்து வைத்தும், 90 விவசாயிகளுக்கு ரூ.1,09 கோடி மதிப்பீட்டில் பயிர்கடனுதவியும், 10 விவசாயி களுக்கு ரூ. 6.33 இலட்சம் மதிப்பீட்டில் கால் நடை பராமரிப்பு கடனுதவியும், 01 மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுயஉதவிக்குழு கடனுதவியும், 26 விவசாயிகளுக்கு ரூ. 26.00 இலட்சம் மதிப்பீட்டில் மத்தியகாலக் கடனுதவியும், 27 விவசாயிகளுக்கு ரூ. 43.20 இலட்சம் மதிப்பீட்டில் நகை கடனுதவியும் என மொத்தம் 154 விவசாயிகளுக்கு ரூ.1,97,42,000 மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : இன்றைய தினம் மூலனூர் ஒன்றியம், எம்.கருப்பன்வலசில் ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூ.23.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட எம்.கருப்பன்வலசு ஊராட்சி மன்ற அலுவலகத்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது, எம்.கருப்பன்வலசில் எரிசினம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. எரசினம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கமானது 30.08.1957 ல் பதிவு செய்யப்பட்டு, 10.10.1957 முதல் தனது பணியை தொடங்கி செயல்பட்டு வருகிறது. எரசினம்பாளையம், முளையாம்பூண்டி, தட்டாரவலசு என மூன்று வருவாய் கிராமங்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கமானது தற்போது 1797 "அ" வகுப்பு உறுப்பினர்களையும், 569 இணை உறுப்பினர்களையும் கொண்டும், பங்கு மூலதனமாக ரூ.109.12 இலட்சத்தை கொண்டும், உறுப்பினர் அளவில் கடன் நிலுவையாக ரூ.923.73 இலட்சத்தை கொண்டும், மேலும் சங்கமானது கடந்த தணிக்கையாண்டில் ரூ.13.92 இலட்சம் நிகர இலாபம் ஈட்டி சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

சங்கத்தின் மூலம் உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன், கால்நடைக் கடன்கள், மத்தியகாலக் கடன்கள், சுய உதவிக்குழு கடன்கள் மற்றும் நகைக்கடன்களை வழங்கி வருகிறது. மேலும், தமிழக அரசின் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம் 2021இன் கீழ் 415 நபர்களுக்கு ரூ.476.07 இலட்சம் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் நகைக்கடன் தள்ளுபடி திட்டம் 2021 இன் கீழ் 66 நபர்களுக்கு ரூ.28.81 இலட்சம் நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி திட்டம் 2021இன் கீழ் 3 குழுக்களுக்கு 29 நபர்களுக்கு ரூ.7.74 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொது சேவை மையம் வருவாய் துறை மற்றும் அரசுதுறையின் கீழ் வரும் அனைத்து சான்றிதழ்களும் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு சிறந்த முறையில் வழங்கி வருகிறது. எரசினம் பாளையம் தொடக்க வேளாண்மை சங்கத்திற்குட்பட்ட முளையாம்பூண்டி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட மக்கள் மற்றும் உறுப்பினர்கள் நலனை கருத்தில் கொண்டு எம்.கருப்பன்வலசு கிராமத்தில் சங்கத்தின் புதிய கிளையினைத் தொடங்க வைக்கப்பட்டுள்ளது. இந்த கிளையின் மூலம் பயிர்க்கடன், கால்நடைக் கடன்கள், பொது நகைக்கடன், சுய உதவிக்குழு கடன் உள்ளிட்ட அனைத்து வகை கடன்களும் வழங்கப்பட உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் இணை பாதிவாளார் சீனிவாசன், மூலனூர் ஒன்றிய கழக செயலாளர்கள் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் ப.பழனிசாமி, துரை தமிழரசு, மூலனூர் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் க.தெண்டபாணி உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் முன்னாள் முதல்வர்

# அருட்தந்தை முனைவர் ஜான்பிரிட்டோ மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 15-

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் முன்னாள் முதல்வர் அருட்தந்தை முனைவர் ஜான் பிரிட்டோ அவர்களின் மறைவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:-

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் முன்னாள் அதிபரும், முதல்வரும், செயலாளருமான அருட்தந்தை முனைவர் ஜான் பிரிட்டோ அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் மனம் வருந்தினேன்.

தாவரவியல் வல்லுநரான அருட்தந்தை ஜான் பிரிட்டோ அவர்கள், ஏழை, எளிய மாணவர்கள் பலரும் உயர்கல்வி பெற உதவி, அவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறவும் உறுதுணையாக இருந்துள்ளார்.


அவரது பிரிவால் வாடும் ஜெயின்ட் ஜோசப் கல்லூரி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரு. செயல்மணி

### அக்டோபர் 15 (2014)



**1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.**

**"1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்" என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி" எனவும்;**

**இரங்கல் செய்தியில் "இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன் ?" என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**